# கே.எம்.ஜி. கலை & அறிவியல் கல்லூரி

குடியாத்தம்- 635803

# 22-ஆம் ஆண்டு விளையாட்டு விழா

2021-2022

தேதி : 04.06.2022

# கே.எம்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## குடியாத்தம்

# 22-ஆம் ஆண்டு விளையாட்டு விழா

## 2021-2022

கே.எம்.ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் உயர்திரு. மேலாண்மை அறங்காவலர் அவர்களே, தலைவர் அவர்களே, செயலாளர் அவர்களே மற்றும் பொருளாளர் அவர்களே, மேலும் சிறப்பு விருந்தினராக வருகை புரிந்துள்ள வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர், கல்விப் புல முதன்மையர் (பொறுப்பு) (கல்லூரி வளர்ச்சிக்குழு), திருவள்ளுவர் பல்கலைக்கழக பொருளாதாரத் துறை பேராசிரியர் **முனைவர்.C.தண்டபாணி** அவர்களே, கல்லூரி முதல்வர் அவர்களே, அனைத்து துறைப் பேராசிரியர்களே மற்றும் ஆசிரியரல்லாப்பணியாளர்களே, கல்லூரியின் ஊன்று கோலாக விளங்கி கொண்டிருக்கும் மாணவ-மாணவிகளே, ஊடகத் துறை நண்பர்களே மற்றும் விழாவிற்கு வருகை புரிந்துள்ள சிறப்பு அழைப்பாளர்களே உங்கள் அனைவருக்கும் காலை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

2021-2022ஆம் ஆண்டிற்கான விளையாட்டு அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெருமிதம் கொள்கிறேன். கல்வியாண்டின் துவகத்திலேயே விளையாட்டு வீரர்கள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அதற்கான பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டு விளையாட்டுத் துறையின் செயல்பாடுகள் துவங்கப்பட்டன.

**குழுக்களும் அவற்றின் பிரதிநிதிகளின் விவரம் பின்வருமாறு :**

| வ.எண் | குழுவின் பெயர் | பொறுப்பாசிரியர்கள் | பிரதிநிதிகள் |
|---|---|---|---|
| 1. | நீலக்குழு | திருமதி.எம்.சரண்யா<br>ஆங்கிலத் துறைத் தலைவர் | எம்.சுந்தர்-<br>இளநிலை மூன்றாமாண்டு வணிகவியல் துறை<br>என்.துர்காதேவி-<br>இளநிலை மூன்றாமாண்டு நுண்ணுயிரியல் துறை |
| 2. | பச்சைக்குழு | திரு.எம்.சக்திவேல்<br>உதவிப்பேராசிரியர்<br>நுண்ணுயிரியல் துறை | ஜெ. வெங்கடேசன்-<br>இளநிலை மூன்றாமாண்டு கணினிப் பயன்பாட்டியல் துறை<br>யு. சம்யுக்தா -<br>முதுநிலை இரண்டாமாண்டு வணிகவியல் |
| 3. | வெள்ளைக்குழு | திருமதி.கே.காந்திமதி<br>உதவிப்பேராசிரியர்<br>வேதியியல் துறை | பி.கவின் -<br>இளநிலை மூன்றாமாண்டு வணிகவியல் துறை<br>ஜி.யாமினி-<br>இளநிலை மூன்றாமாண்டு வணிக கணினிப் பயன்பாட்டியல் துறை |

| | | | |
|---|---|---|---|
| 4. | மஞ்சள்குழு | திரு.எம்.எஸ்.இளங்கோ<br>உதவிப்பேராசிரியர்<br>கணிதவியல் துறை | இ.பி. யுவராஜ்-<br>இளநிலை மூன்றாமாண்டு வணிகவியல் துறை<br>வி.சுவேதா -<br>இளநிலை மூன்றாமாண்டு ஆங்கிலத்துறை |

விளையாட்டுத் துறைச் செயலாளர்களாக எஸ்.ஞானசேகர் இளநிலை மூன்றாமாண்டு கணினி அறிவியல் துறை, கே.ஜீவனாந்தம் இளநிலை முதலாமாண்டு கணினி அறிவியல் துறை மற்றும் ஆர். தாமரைக்கொடி இளநிலை மூன்றாமாண்டு உயிர்வேதியியல் துறைச் சார்ந்த மாணவ-மாணவியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

விளையாட்டுத்துறையில் 2021-2022ஆம் கல்வியாண்டில் மாணவர்கள் படைத்த சாதனைகளைப் பட்டியலிடுவதில் மகிழ்ச்சியுடன் பெருமையும் கொள்கிறேன்.

**அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கிடையேயான போட்டிகள் :**

1. எஸ்.விக்னேஷ் - முதுநிலை இரண்டாமாண்டு ஆங்கிலத் துறையைச் சார்ந்த மாணவர் பாஞ்சாபில் உள்ள லவுலி புரபோஷனல் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அகில இந்திய பல்கலைக்கழக அளவிலான குத்துச்சண்டை போட்டியில் பங்கேற்றார்.
2. ஆர்.குணா-இளநிலை மூன்றாமாண்டு உயிர்வேதியியல் துறை மற்றும் ஏ.நவீன் இளநிலை இரண்டாமாண்டு வணிகவியல் துறைச் சார்ந்த மாணவர்கள் உதய்பூரில் உள்ள ஜனார்தனன் ராய் நகர் ராஜஸ்தான், வித்யேபேத் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அகில இந்திய பல்கலைக்கழக அளவிலான வலுதூக்கும் போட்டியில் பங்கேற்றனர்.

**மண்டல அளவிலான போட்டிகள் :**

ஆற்காட்டில் உள்ள ஹிட் பிட் குத்துச்சண்டை அகாடெமியில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் நடத்திய மண்டலங்களுக்கு இடையேயான குத்துச் சண்டை போட்டிகள் நடைபெற்றன. அதில் கீழ்க்காணும் நம் கல்லூரி மாணவர்கள் வெற்றி பெற்றனர். எஸ்.விக்னேஷ் முதுநிலை இரண்டாமாண்டு ஆங்கிலத்துறைச் சார்ந்த மாணவர் 93கிலோ எடைப்பிரிவில் தங்கப்பதக்கமும் மற்றும் வி.தருண் இளநிலை மூன்றாமாண்டு வணிக ஆள்முறையில் துறையைச் சார்ந்த மாணவர் 85கிலோ எடைப்பிரிவில் வெள்ளிப் பதக்கமும் பெற்றனர்.

திருவண்ணாமலையில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் நடத்திய மண்டலங்களுக்கு இடையேயான தடகளப் போட்டிகள் நடைப்பெற்றன. அதில் எஸ்.ஞானசேகர் இளநிலை மூன்றாமாண்டு கணினி அறிவியல் துறையைச் சார்ந்த மாணவர் ஈட்டி எறிதலில் தங்க பதக்கமும், வட்டு எறிதலில் வெள்ளி பதக்கமும், ஆர்.சதிஷ்குமார் இளநிலை முதலாமாண்டு கணினி அறிவியல்

துறையைச் சார்ந்த மாணவர் குண்டு எறிதலில் தங்கப்பதக்கமும், கே.ஜீவானந்தம் இளநிலை முதலாமாண்டு கணினி அறிவியல் துறையைச் சார்ந்த மாணவர் கோலூண்றி தாண்டுதலில் வெண்கலம் பதக்கமும் மற்றும் கே.புவியரசன் இளநிலை இரண்டாமாண்டு கணினி பயன்பாட்டியல் துறையைச் சார்ந்த மாணவர் 400மீட்டர் தடை தாண்டுதல் போட்டியில் வெண்கல பதக்கமும் வென்றனர். மேலும் இவர்கள் ஒட்டுமொத்த கோப்பைக்கான மூன்றாம் இடத்தையும் பிடித்தனர்.

வி.துனுஷ் இளநிலை மூன்றாமாண்டு வணிக கணினி பயன்பாட்டியல் துறையைச் சார்ந்த மாணவர், கடலூரில் உள்ள பெரியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் நடத்திய மண்டலங்களக்கு இடையேயான ஆணகழன் போட்டியில் 55 கிலோ எடைப்பிரிவில் வெண்கல பதக்கம் வென்றார்.

ஆற்காட்டில் உள்ள சி.அப்துல் ஹக்கீம் கல்லூரியில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் நடத்திய மண்டலங்களுக்கு இடையேயான ஆண்களுக்கான வலுதூக்கும் போட்டி நடைபெற்றன. அதில் ஏ.நவீன் இளநிலை இரண்டாமாண்டு வணிகவியல் துறையைச் சார்ந்த மாணவர் 74 கிலோ எடைப் பிரிவில் தங்கப்பதக்கும், ஆர்.குணா இளநிலை மூன்றாமாண்டு உயிர் வேதியியல் துறையைச் சார்ந்த மாணவர் 59கிலோ எடைப் பிரிவில் தங்கப்பதக்கமும், கே.யுவராஜ் இளநிலை மூன்றாமாண்டு வணிக கணினி பயன்பாட்டியல் துறையைச் சார்ந்த மாணவர் 66 கிலோ எடைப்பிரிவில் தங்கப்பதக்கமும், ஆர்.சஞ்சய் இளநிலை இரண்டாமாண்டு நுண்ணுயிரியல் துறையைச் சார்ந்த மாணவர் 59கிலோ எடைப்பிரிவில் வெள்ளிப் பதக்கமும் மற்றும் ஆர். சத்தீஸ்குமார் இளநிலை முதலாமாண்டு கணினி அறிவியல் துறையைச் சார்ந்த மாணவர் 93கிலோ எடைப்பிரிவில் வெண்கல பதக்கமும் வென்றனர்.

எஸ்.திலக் இளநிலை இரண்டாமாண்டு வணிகவியல் துறையைச் சார்ந்த மாணவர், குடியாத்தத்தில் உள்ள திருமகள் ஆலை அரசுக் கல்லூரியில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் நடத்திய மண்டலங்களுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டியில் பங்கேற்றார்.

**வெளி வளாகத்தில் நடைபெறும் போட்டிகள் :**

எஸ்.யஸ்வந்த் இளநிலை இரண்டாமாண்டு கணினி அறிவியல் துறையைச் சார்ந்த மாணவர் சென்னையில் உள்ள நேரு உள்விளையாட்டு அரங்கில் முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவில் நடைபெற்ற ஜீடோ போட்டியில் பங்கு பெற்றார்.

**நம் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் போட்டிகள் :**

இந்த ஆண்டின் விளையாட்டு விழாவை ஒட்டி கீழ்க்காணும் போட்டிகள் நடைபெற்றன. கைப்பந்து, கோ-கோ, கபடி மற்றும் தடகள போட்டிகள் குண்டு எறிதல், வட்டு எறிதல், உயரம் தாண்டுதல், ஈட்டி எறிதல் போன்ற விளையாட்டுகள் மாணவர்களுக்கும், கோ-கோ, பந்து

எறிதல், குண்டு எறிதல், வட்டு எறிதல் மற்றும் ஈட்டி எறிதல் போன்ற விளையாட்டுகள் மாணவிகளுக்கும் நடைபெற்றன. பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கும் போட்டிகள் நடைபெற்றன.

இப்போட்டிகளில் பங்கேற்றுச் சிறப்பித்த அனைவருக்கும் என் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

போட்டிகளில் பங்கேற்ற மாணவர்கள் பெற்ற வெற்றி புள்ளிகள் அனைத்தும் அவர்கள் சார்ந்துள்ள விளையாட்டு குழுவிற்கு வழங்கப்பட்டு அதிக புள்ளிகள் எடுத்த நீலநிற குழுவை இவ்வாண்டின் விளையாட்டு வெற்றிக் குழுவாக அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன் அவர்கள் பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை 120.

இவ்விளையாட்டுப் போட்டிகளில் நம் மாணவர் பெற்ற வெற்றி அனைத்திற்கும் தூண்டு கோலாகவும், வழிகாட்டியாகவும், வெளிச்சமாகவும் திகழும் நம் கல்லூரியின் மேலாண்மை அறங்காவலர், தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோருக்கு விளையாட்டுத் துறைச் சார்பாகவும், முதல்வரின் சார்பாகவும் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இப்போட்டிகள் சிறப்பாக நடைபெற எல்லா வகையில் உதவிய இக்கல்லூரியின் முதல்வருக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன். மாணவர் நலனில் இவர்கள் காட்டும் ஈடுபாடே, எந்த இடையூறும் இன்றி இவ்வாண்டின் விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெறவும் வழிகோலியது.

விளையாட்டிற்கு அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய பேராசிரியர்களுக்கும் போட்டிகளில் பங்கேற்றுச் சிறப்பித்த அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்விழாவின் வெற்றிக்கு உதவிய அனைவருக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.

4/6/2022

சிறப்பு விருந்தினர்

தலைவர் | செயலர் | முதல்வர் | உடற்கல்வி இயக்குநர்